<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No.128/2021</u>
<u>வழக்கு சாட்சி PW–10</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr. சுடலைமுத்து | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமசுந்தரம் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 49 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.03.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கிருஷ்ணா மருத்துவமனையில் சட்ட மருத்துவ பிரிவில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.11.2016 அன்று பிற்பகல் 02.28 மணிக்கு நடராஜன் என்ற 37 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்துள்ளார். அவருக்கு அப்போதைய மருத்துவர் திரு.சந்திரகுமார் அவர்கள் சிகிச்சை அளித்துள்ளார். அவர் தற்போது உயிருடன் இல்லை. நான் மருத்துவமனையில் இருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம்.

நடராஜன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போது, அவர் 29.10.2016 அன்று தென்காசியில் வைத்து தாக்குதலில் காயமுற்றதாகவும், அவருக்கு இடது பக்க கை மற்றும் கால் செயலிழந்ததாகவும் கூறி

சிகிச்சைக்கு வந்தார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து எம்.ஆர்.ஐ ஸ்கேன் தலைப்பகுதிக்கு எடுத்து பார்த்ததில் அவருக்கு மூளையின் வலது பக்கம் இரத்தம் ஓட்டம் இல்லாததினால் ஏற்படும் பாதிப்பு இருந்ததாக தெரிய வந்தது. அவருக்கு நரம்பியல் நிபுணர் மூலம் மேல்சிகிச்சை அளிக்கப்பட்டு மருத்துவமனையிலிருந்து 11.11.2016 அன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு மருந்து, மாத்திரைகள் மூலம் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. அவருக்கு மருத்துவர்.சந்திரகுமார் என்பவரால் வழங்கப்பட்ட சிகிச்சை விபரச்சான்று **அ.சா.ஆ.7** ஆகும்.

**<u>நீதிமன்ற கேள்வி</u> –**

நீங்கள் நோயாளிக்கு இருந்ததாக கூறியுள்ள பிரச்சனை என்ன காரணத்தினால் வரலாம்?.

**<u>பதில் </u>–**

நோயாளிக்கு இரத்தக்கொதிப்பு அதிகமாகி பக்க வாதம் ஏற்படும்போது இவ்வாறு பிரச்சனை வரலாம். தலையில் தாக்கப்படும்போது நேரடியாக இந்த பிரச்சனை வராது. சில வேளைகளில் தலையில் தாக்கப்படும்போது இரத்தக்கொதிப்பு அதிகமாகி இந்த பிரச்சனை வர வாய்ப்புள்ளது.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

29.10.2016ம் தேதிக்கு முன்பாகவே அவருக்கு அந்த பிரச்சனை மூளையில் இருந்திருக்கலாம் என்றால் அந்த தேதிக்கு பின்னர் கால், கை செயலிழந்ததாக நோயாளி சொல்லியுள்ளார். மருத்துவர் பார்க்கும் போது கால், கை செயலிழந்து இருந்துள்ளது. நோயாளிக்கு ஏற்கனவே இரத்தக்கொதிப்பு மற்றும் சர்க்கரை வியாதி, இருதய வியாதி, ஆஸ்துமா இருந்துள்ளதாக சிகிச்சை குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பிரச்சனைகள் இருந்தால் சாதாரணமாக நோயாளிக்கு பக்கவாதம் ஏற்பட

வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. எம்.ஆர்.ஐ அறிக்கை எங்கள் மருத்துவமனை கோப்பில் இல்லை. அதனை பார்த்து நரம்பியல் நிபுணர் சிகிச்சை குறிப்பில் எழுதியுள்ளார்.

(1ம் எதிரியின் குறுக்கு விசாரணையானது, இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை.

**சாட்சி திருநெல்வேலி முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம்** Thiru Ramprasad, Typist, **முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருநெல்வேலி என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.13 18:28:15 +0530